**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 15/2015**

நாள் 16.10.2024.
PW4 – மயில்சாமி
த/பெ – துரைசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of October 2024.)**

**குறுக்கு விசாரணை**

1. நான் எனது தாயாருக்காக வேண்டி இந்த வழக்கை முன்நின்று நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு தேவையான ஆவணங்களை பெற்றதும், விவரங்களை பெற்றதும் மற்றும் வழக்கறிஞரை பார்த்து வழக்கு விபரங்களை சொன்னது நான் தான் என்றால் சரிதான். நான் 1984 ஆம் ஆண்டில் பிறந்தேன். தாவா சொத்திற்கு தாயார் வரி செலுத்தி வந்தார் என்பதற்கு எந்தவிதமான ஆவணமும் இல்லை என்றால் சரிதான், எனது தாயாரின் தகப்பனார் வரி செலுத்தி வந்தார். எனது தாயாரின் தகப்பனார் பெயர் கருப்பண கவுண்டர் அந்த கருப்பண்ண கவுண்டரின் அப்பா பெயர் முத்துச்சாமி கவுண்டர். அந்த முத்துச்சாமி கவுண்டர் 40 வருடங்களுக்கு முன்பு இறந்து போய்விட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அவர் இறந்தது மட்டும் தான் எனக்குத் தெரியும்.

2. முத்துச்சாமி கவுண்டரின் மனைவி பெயர் கருப்பாயி அம்மா என்றால் அது எனக்குத் தெரியாது. முத்துச்சாமி கவுண்டருக்கு 3 பெண் மக்கள், 1 ஆண் மகன் என்றால் சரிதான். அந்த ஒரு மகன் தான் கருப்பண்ண கவுண்டர் என்றால் சரிதான். நான் எம்பிஏ வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் 04.09.1941 தேதியிட்ட பதிவு

கிரைய பத்திரம் மூலம் தாவா சொத்தின் ஒரு பகுதியை கருப்பண்ண கவுண்டர் மைனராக இருந்த போது அவரது தாயார் கருப்பாயிம்மாள் என்கிற சின்னக்காள் கார்டியனாக இருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் 04.09.1941 தேதியிட்ட பதிவு கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டது. அதே போல் 08.06.1961 தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் தாவா சொத்தில் ஒரு பகுதியை கருப்பண்ண கவுண்டர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் 08.06.1961 தேதியிட்ட பதிவு கிரைய பத்திரம் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டது.

3. எனது தாயாரின் தகப்பனார் கருப்பண்ண கவுண்டர் நல்ல உழைப்பாளி என்றால் சரிதான். அவர் பருத்தி வியாபாரமும், பவர் லூம் வைத்து நடத்தி வந்தார் என்றால் சரிதான். அதே போல் அவர் பனியன் கம்பெனியும் நடத்தி வந்தார் என்றால் அது தவறு. தாவா சொத்துக்கள் மானாவரி புஞ்சை என்றால் சரிதான், தரிசு நிலம். பல வருடங்களுக்கு முன்பாக கடும் வறட்சி ஏற்பட்டு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு தண்ணீர் இல்லாமல் வறண்டு விட்டது என்றால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டது உண்மை. நான் 1984 ஆம் ஆண்டு பிறந்துள்ள நிலையில் 1941, 1961 ஆண்டுகளில் பி.வா.சா.ஆ.5, பி.வா.சா.ஆ.6 ஆவணங்களின் படி எந்த மூல ஆவணங்களின் பேரில் கிரையம் பெற்றார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கருப்பண்ண கவுண்டர் தான் நடத்தி வந்த பருத்தி வியாபாரத்தின் மூலமும், பவர் லூம் தொழில் செய்து வந்த வகையிலும் நல்ல வருமானம் கிடைத்தது என்றால் அது எனக்குத் தெரியாது. 1–ம் பிரதிவாதி அம்மணி அம்மாள் எனது தாயாரின் தாயார் என்றால் சரிதான்.

4. என்னிடம் காட்டப்படும் 03.07.2012 தேதியிட்ட பதிவு தான செட்டில்மெண்ட் ஆவணமானது அம்மணி அம்மாள் தாவா சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து 4,5 பிரதிவாதிகள் பெயருக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் 03.07.2012 தேதியிட்ட பதிவு தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட பதிவு நகல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் 22.09.1967 தேதியிட்ட பதிவு பாக சாசனம் ஆவணமானது எனது தாயாரின் தகப்பனரான கருப்பண்ண கவுண்டர் மற்றும் மற்ற பங்கு தாரர்கள் சேர்ந்து தாவா சொத்தின் ஒரு பகுதி சொத்தை பொறுத்து ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பதிவு ஆவணம் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் அந்த 22.09.1967 தேதியிட்ட பதிவு பாக சாசனம் அசல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பபட்டது.

5. பி.வா.சா.ஆ.7 பதிவு தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் சான்றிட்ட நகல் ஆவணத்தை பெற்று நான் தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை . அந்த ஆவணத்தை பற்றி நான் இன்று தான் தெரிந்து கொண்டேன். பி.வா.சா.ஆ.7–ல் சாட்சியாக கையொப்பம் செய்துள்ள பெரியசாமி மகன் கோவிந்தசாமி என்பவரை எனக்குத் யார் என்று தெரியாது. மேற்படி பி.வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் ஆவணத்தை எனதுஅறிவுரையின் பேரில் தான் அம்மணி அம்மாள் ஏற்படுத்தி உள்ளார் என்றால் சரியல்ல. 4,5 பிரதிவாதிகள், நானும் நல்ல உறவு முறையில் தான் இருந்து வருகிறோம். அதே போல் 2–ம் பிரதிவாதியும் அவர் இறக்கும் வரை நல்ல சுமூகமாகத்தான் இருந்து வந்தார். 4,5,8 பிரதிவாதிகள் எல்லோரும் வாதியுடன் சேர்ந்து ஒன்றாக வழக்கு நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். 3,6,7 பிரதிவாதிகளுடன் எங்களுக்கு பேச்சு வார்த்தை கிடையாது என்றால்

சரிதான், கருப்பண்ண கவுண்டர் இறந்த பின்னிட்டு தான் அவர்களுடன் பேச்சுவார்த்தை கிடையாது.

6. என்னிடம் காட்டப்படும் 15.05.2009 தேதியிட்ட பதிவு தான செட்டில்மெண்ட் பத்திரத்தை கருப்பண்ண கவுண்டர் அவரது மகனான 3 பிரதிவாதி வெங்கடாசல கவுண்டருக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் 15.05.2009 தேதியிட்ட பதிவு தான செட்டில்மெண்ட் பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டது. அதேபோல் மற்றொரு ஆவணமான என்னிடம் காட்டப்படும் 30.04.2009 தேதியிட்ட பதிவு தான செட்டில்மெண்ட் பத்திரத்தை கருப்பண்ண கவுண்டர் அவரது மகனான 3 பிரதிவாதி வெங்கடாசல கவுண்டருக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் 30.04.2009 தேதியிட்ட பதிவு தான செட்டில்மெண்ட் பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டது. அதேபோல் என்னிடம் காட்டப்படும் 09.08.1959 தேதியிட்ட அடமான கடன் பத்திரம் மூலம் தாவா சொத்தின் ஒரு பகுதியை அடமானம் வைத்துள்ளார் என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது.

7. கடந்த 30.09.2004 தேதியில் கருப்பண்ண கவுண்டர் அவருடைய பேரன்கள் பெயரில் பதிவு உயில் ஆவணத்தை எழுதி வைத்துள்ளார் என்றால் அது எனக்குத் தெரியாது. எனது தாத்தா கருப்பண்ண கவுண்டர் 2004 ம் ஆண்டில் நல்ல மனநிலையில் இருந்து வந்தார் என்றால் சரிதான். 3–ம் பிரதிவாதி அவருக்கு தான செட்டில்மெண்ட் கிடைத்த சொத்துக்களில் கட்டிடம் கட்டி வாடகைக்கு விட்டுள்ளார் என்றால் சரிதான். 3–ம் பிரதிவாதி அவருக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம்

மூலம் கிடைத்த சொத்துக்களை பட்டா மாறுதல் செய்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அந்த பட்டா மாறுதல் உத்தரவு தான் என்னிடம் காட்டப்படும் 10.11.2017 தேதியிட்ட உத்தரவு என்றால் சரிதான். அந்த பட்டா மாறுதல் உத்தரவு பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டது. அந்த சொத்துக்களுக்கு 3–ம் பிரதிவாதி அவர் பெயரில் சொத்து வரி செலத்தி வருகிறார் என்றால் சரிதான். அந்த சொத்து வரி ரசீது தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த சொத்து வரி ரசீதுகள் (4 எண்ணிக்கை) பி.வா.சா.ஆ.12, சொத்து வரி ரசீதுகள் (2 எண்ணிக்கை) பி.வா.சா.ஆ. 13, சொத்து வரி ரசீதுகள் (2 எண்ணிக்கை) பி.வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டது.

8. எனது தாத்தா கருப்பண்ண கவுண்டர் அவருடைய மகன்களுடனும், அவருடைய பேரன்களுடனும் சேர்ந்து கடந்த 06.04.2009 தேதியில் ஏற்படுத்திக்கொண்ட பதிவு பாக சாசனம் அசல் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான், அந்த காலகட்டத்தில் கருப்பண்ண கவுண்டர் உடல்நிலை, மனநிலை சரியில்லாமல் இருந்தார். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரிர் 06.04.2009 தேதியிட்ட பதிவு பாக சாசனம் அசல் பி.வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டது. தாவா சொத்தில் உள்ள கட்டிடங்களுக்கு 3–ம் பிரதிவாதி அவரது பெயரில் மின் கட்டணம் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். எனது தாத்தா கருப்பண்ண கவுண்டர் பவர் லூம் வைத்து நடத்தி வந்தார் என்பதற்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட அனுமதி சான்று என்றால் சரிதான். அந்த அனுமதி சான்று பி.வா.சா.ஆ.16. எனது தாத்தா கருப்பண்ண கவுண்டர் மனநிலை சரியில்லாமல் இருந்தார் என்பதற்கு மருத்துவ ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் என் வசம் எதுவும் இல்லை. கருப்பண்ண கவுண்டருக்கு பூர்வீக சொத்துக்கள் இருந்தது என்பதற்கு அவரது அப்பா,

அவரது தாத்தா பெயரில் உள்ள ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. கருப்பண்ண கவுண்டருக்கு பூர்வீக சொத்துக்கள் இருந்து என்றும் அந்த பூர்வீக சொத்துக்களில் இருந்து வருமானம் வந்தது என்றும் காட்டுவதற்கு ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் எனது தாயாரை அனுபவம் செய்வதற்கு 3–ம் பிரதிவாதி வெங்கடாசலம் விடுவதில்லை என்றால் சரிதான். எனது தாயார் கூட்டு அனுபவத்தில் இல்லாததால் அவரது பெயரில் கந்தாய ரசீது, வீட்டுவரி ரசீது எதுவும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கை நடத்துவதற்கு வாதிக்கு உதவியாக 4,5,8 பிரதிவாதிகள் உதவியாக இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 2–ம் பிரதிவாதி செல்லமுத்து அவர் இறக்கும் காலம் வரையில் எனது தாயாருக்கு உதவியாக இருந்து வந்தார் என்றால் சரிதான். 3–ம் பிரதிவாதிக்கும், 4,5,8 பிரதிவாதிகளுக்கும் இடையே பேச்சு வார்த்தை கிடையாது என்றால் சரிதான்.

9. நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல கருப்பண்ண கவுண்டருக்கு கட்டி ஏற்பட்டு அதற்காக மருத்துவமனைக்கு அழைத்து சென்றது குறித்து ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் தற்போது கைவசம் எதுவும் இல்லை, தேவைப்பட்டால் ஆவணத்தை சேகரித்து தருகிறேன். வழக்கு சொத்துக்கள் கருப்பண்ண கவுண்டரால் அவரது பொதுக்குடும்ப நிதியிலிருந்து கிரையம் பெறப்பட்டது என்று நான் சொல்லுவதற்கு அது சம்பந்தப்பட்ட ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. கருப்பண்ண கவுண்டர் ஊத்துக்குளியில் நிதிநிறுவனம் வைத்து நடத்தி வந்தார் என்றால் சரிதான். அவர் அவரது உழைப்பில் கிடைத்த தொகையை மூலதனமாக வைத்து நிதிநிறுவனம் நடத்தி வந்தார் என்றால் சரிதான். கருப்பண்ண கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சில சர்வே எண்கள் கொண்ட சொத்துக்கள் வழக்கில்

காட்டப்படவில்லை என்றால் அது எனக்குத் தெரியாது. கருப்பண்ண கவுண்டருக்கு பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றும், அவருடைய சொந்த உழைப்பில் கிடைத்த வருமானத்தை கொண்டு தான் தொழில் நடத்தி வந்தார் என்றும், அதில் கிடைத்த வருமானத்தை கொண்டு தான் தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்றும் சொன்னால் சரிதான், ஆனால் கிரையம் பெற்ற பிறகு தொழில் செய்து வந்தார். எனது முதல் விசாரணையில் எனது பிறப்பிற்கு முன்பான விவரங்கள் குறித்து சொல்வதற்கு நான் தகுதியற்றவர் என்று சொன்னால் சரியல்ல. எனது தாயாருக்கு வேறு 3–ம் நபர்கள் சாட்சியாக இல்லை என்பதால் அவரது மகனான நான் எனது தாயாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் உண்மைக்கு புறம்பான விஷயங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் எனது தாயார் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> :** இல்லை

Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.

Sd/-C.Senthil Kumar
Subordinate Judge,
Avinashi.